<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 359/2025**

**Prosecution witness : அ.சா. 10** **Date : 19.02.2026.**

| | |
|---|---|
| **Name : பிரபா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் தற்போது கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.05.2025–ம் தேதி மேட்டுர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த மகுடேஷ்வரன் த/பெ தனக்கொடி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப ஏற்ப கருமலைக்கூடல் காவல் நிலைய குற்றஎண்.254/2025 ச/பி 281, 125(a), 106(1) BNS பிரிவில் வழக்கு பதிவு செய்தார்.

2) பிறகு முதல்தகவல் அறிக்கை மற்றும் வழக்கு கோப்பை எனது வசம் ஒப்படைத்ததன் அடிப்படையில், நான் கடந்த 19.05.2025–ம் தேதியன்று காலை 06.00 மணிக்கு சம்பவயிடம் வீரக்கல் டூ கருமலைக்கூடல் சாலை கந்தசாமி தோட்டம் அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் மணிக்கண்டன், மணிவேல் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர்தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆகும்.**

3) பிறகு சாட்சிகள் தகுடேஷ்வரன், நாகலட்சுமி, பழனிசாமி, பவித்ரன், சசித்ரா, விசித்ரா , மணிகண்டன், மணிவேல் செந்தில்ராம், கண்ணன், ஜெயராமன், பிரகாஷ், சீனிவாசன், ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

முன்பாக இவ்வழக்கில் காயம்பட்ட சுரேந்திரன் மற்றும் மகுடேஷ்வரன் என்பவர் மேட்டூர் அரசு மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டு, மகுடேஷ்வரன் சிகிச்சை பெறாமல் மற்றும் சுரேந்திரன் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று காயம்பட்ட சுரேந்திரன் என்பவர் 19.05.2025–ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்து பதிவெடு **அ.சா.ஆ.6** ஆகும்.

4) பின்னர் பிரேதத்தின் மீது இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்யப்பட்டது. **பிரேத விசாரணை அறிக்கை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்.** இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் ஜெயராமன் அவர்களிடம் தலைமை காவலர் பிரகாஷ் என்பவர் மூலமாக பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு கடந்த 19.05.2025–ம் காலை 10.30 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. **சடலகூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.8.** ஆகும். பிறகு நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

5) விபத்தில் ஈடுபட்ட TN–52T3536 Yamaha Two wheeler கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திரு.கண்ணன் வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளாறு அறிக்கை அ.சா.ஆ.9 ஆகும்.** விபத்தில் ஈடுபட்ட TN–52V5548 மாருதி ஆம்னி வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திரு.கண்ணன் வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளாறு அறிக்கை அ.சா.ஆ.10. ஆகும்.**

6) கடந்த 20.05.2025 ம் தேதி எதிரி கைது செய்யப்பட்டு தக்க நிலையப்பிணையில் விடுவித்தார்.

7) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 01.07.2025–ம் தேதி குற்றஎண்.254/2025 ச/பி 281, 125(a), 106(1) BNS ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

8) இவ்வழக்கில் அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்து தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். புகார்தாரர் மகுடேஷ்வரன் தனது வாக்குமூலத்திலும், புகாரிலும் மாருதி வேன் தவறான திசையில் மோதியதாக கூறவில்லை என்றால் எதிர் திசையில் மோதியதாக கூறியுள்ளார். விபத்து நடந்த இடம் வளைவான பகுதி என்பதால் எதிரில் வரும் வாகனத்தை தெளிவாக பார்க்க முடியாது என்றால் சரியல்ல.

9) விபத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட எதிரி காவல் நிலையம் வந்த போது நல்ல புத்தி சுவாதினம் மற்றும் நிதானமாக இருந்தார்கள் என்றால் 18.05.2025 ம் தேதி விபத்து நடந்தது காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்ட தேதி 20.05.2025 ம் தேதியாகும். கைது செய்யப்பட்ட தேதியன்று புத்தி சுவாதினத்துடன் இருந்தார். மாதிரி வரைபடத்தில் உள்ள பாப்பாள், வேணுகோபால், கிருஷ்ணன் ஆகியோரை சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

10) அதிவேகம் என்பதை சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மருத்துவர் ஜெயராமன் அறிக்கையில் பரிசோதனைக்கு பின் இறப்பிற்கான காரணத்தை ரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் கண்ட பின்னர் தான் தெரிவிக்க முடியும் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ரசாயன பகுப்பாய்வு அறிக்கை ஆய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

11) பிரேத விசாரணை அறிக்கையில் விபத்திற்கான தோராய காரணம் தான் புலப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தடய ஆய்வியல் அறிக்கையில் 27.05.2025 முதல் 04.06.2025 வரை செய்யப்பட்ட பரிசோதனை முடிவில் வயிறு, குடல், ஈரல், சீறுநீரகம் போன்றவற்றில் மது அருந்தியதற்கான சான்றுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வயிறு, குடல் கல்லீரல், சிறுநீரகம் ஆகியவற்றில் Detected Ethyl Alcohol எனவும், Preservative Did not Detected Ethyl Alcohol Or Other Poison எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

12) இது சம்மந்தமாக மீண்டும் மருத்துவரை அழைத்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இரு சக்கர வாகனம் ஓட்டி வந்த இறந்து போன சுரேந்தரனின் விபத்து பதிவேடு அறிக்கையில் அவர் இரு சக்கர வாகனம் ஓட்டி வந்த போது மதுபோதையில் எதிரில் வந்த மாருதி வேனில் மோதிவிட்டதாக அவருடன் பயணித்த மகுடேஷ்வரன் அ.சா.1 சாட்சியத்தின் போது சுரேந்திரன் மதுபோதையில் வாகனம் ஓட்டியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை.

13) மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் எதிரி ஓட்டிய வாகனத்திற்கு இன்சூரன்ஸ், டிரைவிங் லைசென்ஸ் உரிய காலகெடுக்குள் இருந்ததாக தெரிவித்துள்ளார் என்றால் ஆமாம். மாருதி வேனில் எந்த இயந்திர கோளாறும் இல்லை, பிரேக், ஸ்டெயரிங், டயர் நல்ல நிலையில் திருப்திகரமாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சாலை குறைபாடு, வாகன குறைப்பாட்டால் விபத்து ஏற்படவில்லை என்றும் இரு சக்கர வாகனம் ஓட்டி வந்த சுரேந்தர் என்பவர் மது போதையில் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் வந்து தான் விபத்தை ஏற்படுத்திக் கொண்டு மரணமடைந்தார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.02.20 11:25:48 +0530

Judicial Magistrate No.II,
Mettur.